


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2025) மதுரையில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர்கள் மாநாட்டில், ஐந்து தொழில் நிறுவனங்களின் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள், நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2025) மதுரை மாவட்டம், பந்தல்குடி வாய்க்காலில் 69 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாயின் இருபுறமும் வெள்ள தடுப்பு பக்கவாட்டு சுவர் கட்டும் பணிகள், கால்வாயில் தண்ணீர் செல்லும் திறனை மேம்படுத்துவற்காக மண்படுகைத் தளத்தை கான்கிரீட் தளமாக மாற்றம் செய்யும் பணி உள்ளிட்ட பல்வேறு கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்தில் கொடி நாளையொட்டி, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே அவர்களிடம் கொடி நாள் நிதிக்கு நன்கொடை வழங்கினார்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலை மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் ஏற்பாட்டில் நாம் தமிழர் கட்சி செயலாளர் ஜெகன் தலைமையில் 40 நபர்கள், பி.ஜே.பி உடுமலை மேற்கு ஒன்றிய வர்த்தக அணி தலைவர் புவனேஸ்வர், இளைஞர் அணி துணை தலைவர் மனோஜ், கிளை தலைவர் ராஜேந்திரன் தலைமையில் 50 மேற்பட்ட நபர்கள், அ.தி.மு.க, த.வெ.கவைச் சேர்ந்த 35 நபர்கள் கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் தி.செழியன், கே.செந்தில்குமார், எஸ்.கே.எம்.தங்கராஜ் உள்பட ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் பிறந்த நாள்! ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில்

# ஈரோடு தெற்கு மாவட்டத்தில் பல்வேறு போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி பரிசுகள் வழங்கினார்!

ஈரோடு, டிச. 9–

கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாள் விழா ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் மாநில அளவிலான சதுரங்கம், ஓவியம், கட்டுரை, திருக்குறள் ஒப்புவித்தல் ஆகிய போட்டிகள் 1600 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

அமைச்சர் சு.முத்துசாமி போட்டிகளை துவக்கி வைத்து, பரிசுகள் வழங்கினார்.

கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான சதுரங்கம், ஓவியம், கட்டுரை, திருக்குறள் ஒப்புவித்தல் ஆகிய போட்டிகள் ஈரோடு பேருந்து நிலையம் அருகில் உள்ள மல்லிகை அரங்கத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் 400 பேரும், ஓவியம், கட்டுரை, திருக்குறள் ஒப்புவித்தல் ஆகிய போட்டிகளில் 1600க்கும் மேற்பட்டவர்களும் கலந்து கொண்டனர்.

போட்டிகளை மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கினார் . மேலும் போட்டியில் கலந்து கொண்ட 1600 மாணவ மாணவிகளுக்கும் சான்றிதழ்கள், கல்வி உபகரண பொருட்கள், டிபன் பாக்ஸ் மற்றும் அறுசுவை உணவு வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினரும் கழக துணை பொதுச் செயலாளருமான அந்தியூர் ப.செல்வராசு, மாநில இளைஞரணி துணை செயலாளரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ், மாநில இளைஞரணி துணை செயலாளரும், மண்டலம் 4ன் பொறுப்பாளருமான பி.எஸ்.சீனிவாசன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளரும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான வி.சி.சந்திரகுமார், மாவட்ட அவைத்தலைவர் கே.குமார்முருகேஸ், மாவட்ட துணை செயலாளர்கள் ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, க.சின்னையன்,

மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ், கோட்டை பகுதி கழக செயலாளர்கள் பொ.ராமச்சந்திரன், அக்னி சந்துரு மாநகர இளைஞரணி அமைப்பாளர் சேர்ந்தபுகழ், 36வது வட்டக் கழக செயலாளர் லோ.ஹரிஹரன், 36வது வட்ட மாமன்ற உறுப்பினர் நா.செந்தில்குமார், தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கி.ரகுராம் ச.சதீஷ்குமார், எஸ்.எஸ்.விஜயராஜன், இரா.நித்தின் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பா.ஜாகிர் உசேன், செ.ரமேஷ், எஸ்.சசிகுமார், அ.பார்த்திபன், பெ.சீனிவாசன், வி.நவீன் குமார், அ.அன்பரசன் கோட்டை பகுதி இளைஞரணி அமைப்பாளர் கு.ஹரிபிரசாத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், இளைஞரணியினர், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் சிறப்பாக செய்திருந்தார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2025) மதுரையில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர்கள் மாநாட்டில், பாரம்பரியம் மற்றும் புதிய வாய்ப்புகள் இணையும் முன்னோடியான நகரமாக மதுரை வளர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்கில் நகர ஊரமைப்பு இயக்ககம் (DTCP) தயாரித்துள்ள "மதுரை மாஸ்டர் பிளான் 2044 னை வெளியிட்டார். நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்தில், கொடி நாளையொட்டி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, அவர்களிடம் கொடி நாள் நிதிக்கு நன்கொடை வழங்கினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பொதுத்துறை கூடுதல் செயலாளர் கே.பாலசுப்பிரமணியம், முன்னாள் படைவீரர் நல இணை இயக்குநர் மேஜர் சுரேஷ் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### சிந்து சமவெளி நாகரிகத்தை ‘சிந்து’ சரசுவதி நாகரிகம் என வரலாற்றைத் திரிக்கும் ‘கோவை கருத்தரங்கம்’

# மதவெறி அமைப்பான தென்னிந்திய ஆய்வு மையம் (CSIS) கல்லூரிகளுக்குள் கால் வைக்காமல் தடுப்போம்!

## கழகக் கல்வியாளர் அணித் தலைவர் – புலவர் செந்தலை ந.கவுதமன் கண்டன அறிக்கை!

கோவை, டிச.9–

சிந்து சமவெளி நாகரிகத்தைச் ‘ சிந்து சரசுவதி நாகரிகம் ‘ என வரலாற்றைத் திரிக்கும் கோவைக் கருத்தரங்கம் என்றும் மதவெறிக் கிளை அமைப்பான ‘ தென்னிந்திய ஆய்வு மையம் ( CSIS ) ‘ கல்லூரிகளுக்குள் கால் வைக்காமல் தடுப்போம் என்றும் கழகக் கல்வியாளர் அணித் தலைவர் செந்தலை ந.கவுதமன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:–

ஆர்.எஸ்.எஸ். மதவெறி அமைப்பின் கிளை அமைப்பே தென்னிந்திய ஆய்வு மையம் எனும் சி.எஸ்.ஐ.எஸ்.!

தமிழ்நாடு முழுவதும் கல்லூரிகளுக்குள் கருத்தரங்க வேடத்தில் புகுந்து ஆள் பிடிப்பதும் காவிமயமாக்குவதும் இந்த அமைப்பின் வேலை.

மாணவர்களைப் பிளவுபடுத்தும் வேலையையும் சாதி,மத வெறியர்களாக்கும் வேலையையும் வெகுநுணுக்கமாக இவ்வமைப்பு நிகழ்த்தி வருகின்றது.

இந்த மதவெறி அமைப்பை அனுமதித்து வெளிப்படையாக ஒத்துழைக்க முன்வந்திருக் கிறது கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி.

தமிழ்நாட்டரசின் நிதியில் இயங்கும் அரசு உதவிபெறும் கல்லூரி இது ! வெளிப்படையாக மதவெறி அமைப்போடு கைகோத்துச் செயல்படும் துணிச்சல் இந்தக் கல்லூரிக்கு எப்படி வந்தது ?

உயர்கல்வித்துறை மிகுந்த கவலையோடு இக்கல்லூரி மீதும் , நச்சுவிதை தூவும் ஆசிரியர்கள் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இளையதலைமுறையை மதவெறிப் பிடிக்குள் சிக்காமல் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமையும் அறிவாளர் கடமையும் ஆகும்.

**கருத்தரங்கம் நடத்துவது தமிழ்த்துறை !**

கட்டுரையைத் தமிழில் மட்டுமல்ல; இந்தியிலும்



சமஸ்கிருதத்திலும் கூட எழுதலாம் என்கிறது அறிக்கை . உள்நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள இந்த ஒருவரி போதாதா?

சிந்து சமவெளி நாகரிகத்தைச் ‘ சிந்து சரசுவதி நாகரிகம் ‘ எனக் கொச்சைப்படுத்துவது , தமிழர் வரலாற்றைத் தாழ்த்தும் அழிவுமுயற்சி என்பதை அறியாதவர்களா ஆசிரியர்கள்?

தங்கள் பெயரை இந்த அறிக்கையில் போடச் சம்மதித்தவர்கள், எந்த நெருக்கடியால் இப்படிச் செய்தார்கள் என்பதை அரசு கண்டறிய வேண்டும்.

கல்லூரிகளை மதவெறியர் பிடிக்குள் கொண்டுசெல்லும் இதுபோன்ற அழிவுமுயற்சிகளை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். கல்வித்துறையைக் காவிமயமாக்கக் கைகொடுப்போரை அடையாளம் காண வேண்டும் ; அப்புறப் படுத்த வேண்டும்.

மனிதநேயம் காப்பாற்றப்பட மதவெறி முயற்சிகளைக் களையெடுப்பது மிக முக்கியமான பணி .

மதவெறியை மறைமுகமாகத் தூண்டும் சி.எஸ். ஐ.எஸ். போன்ற அமைப்புகள், கல்லூரிகளுக்குள் நுழைய விடாமல் தடுக்க வேண்டும்.

நஞ்சுக்கு இனிப்பு தடவி நீர்வளப் பாதுகாப்பு போன்ற முகமூடிகளோடு வருவது அவர்களின் வழக்கம். முகமூடியைக் கிழித்துக் காட்டி மதவெறிக் கோரமுகத்தை அடையாளம் காட்டும் கடமை, அறிவு வளர்ச்சியை விரும்பும் அனைவரின் கடமை.

கோவைக் கல்லூரியில் திசம்பர் 12, 13 நிகழவுள்ள கருத்தரங்க முகமூடி அழிவுச் செயல் நிகழாமல் தடுப்பது உடனடித் தேவை என தி.மு.க. கல்வியாளர் அணி தலைவர் செந்தலை ந.கவுதமன் தெரிவித்துள்ளார்.




முதலமைச்சர் சென்னையில் அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.அதனை தொடர்ந்து, தருமபுரி கிழக்கு மாவட்டம், அரூர் கொங்கு மஹாலில் நடைபெற்ற அரசு விழாவில் 6,146 பயனாளிகளுக்கு சுமார் ரூ.75.43 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி ஆகியோர் வழங்கினர்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,கோட்டாட்சியர் செம்மலை,மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




சேலத்தில் சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் நினைவுதினத்தையொட்டி சேலம் மத்திய மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் நலிவுற்றவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட அமைப்பாளர். அழகாபுரம் முரளி தலைமையில் சேலம் மாநகர மேயர் ஆ.ராமச்சந்திரன் வழங்கினார். உடன் மாவட்ட தலைவர். துணை அமைப்பாளர்கள். பகுதி, ஒன்றிய .பேரூர். துணை அமைப்பாளர்கள் இருந்தனர்.